2.3.2019-S.C.40/2012- P.W.14 அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

கு.வி. எதிரி தரப்பில்

சம்பவத்தை பற்றி தகவல் கிடைத்தபிறகு சம்பவயிடத்திற்கு சென்றேன். மேற்படி தகவல் தொலைபேசி மூலமாக எனக்கு தெரிவிக்கப்பட்டது. அப்போது நான் எழுமலை காவல்நிலையத்தில் இருந்தேன். அப்போது நேரம் சரியாக தெரியவில்லை. சம்பவயிடத்திற்கும் எழுமலை காவல்நிலையத்திற்குமிடையே சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும். நான் சம்பவயிடத்திற்கு செல்லும்போது 30.6.2011ம் தேதி மாலை சுமார் 3.30 மணி இருக்கும். புகாரை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் புகார் நகலினை என்னிடம் கொடுக்கும்போது சம்பவயிடத்திற்கு போவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு கொடுத்தார். சுமார் 5 நிமிடத்திற்கு முன்பாக கொடுத்தார். அதை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் எதுவும் சார்பு ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. சார்பு ஆய்வாளருக்கு பாஸ்போர்ட் தேவையில்லை. சார்பு ஆய்வாளர் காவல்நிலையத்தில் இருந்து புறப்படவேண்டுமென்றால் பொது நாட்குறிப்பில் பதிவு செய்து செல்லவேண்டுமென்றால் சரி. மேற்படி பொது நாட்குறிப்பை பார்த்தால்ர சார்பு ஆய்வாளர் எத்தனை மணிக்கு காவல்நிலையத்தில் இருந்து புறப்பட்டார் என்றும் எத்தனை மணிக்கு என்னிடம் புகார் நகலினை ஒப்படைத்தார் என்று தெரியவரும் என்றால் சரி. நான் மேற்படி பொதுநாட்குறிப்பை பார்க்கவில்லை. காயம்பட்ட ஒரு நபரோ இறந்த நபரோ மருததுவமனைக்கு சென்றால் அங்கு விபத்து பதிவேடு தயார் செய்வார்கள் என்றால் சரி. அதேபோல் மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு தகவல் அனுப்புவார்கள் என்றால் சரி. நான் பிரேத விசாரணை முடித்துவிட்டு பிரேதத்தை மருததுவமனைக்கு அனுப்பினால் மருத்துவமனையில் அதை பெற்றுக்கொள்ளும் மருத்துவர் ஒரு விபத்து பதிவேட்டை தயார் செய்வார் என்றால் சரி. அதில் எந்த காவலர், பிரேதத்தை கொண்டு வந்தார், எத்தனை மணிக்கு கொண்டு வந்தார் என்ற விவரம் இருக்கும் என்றால் சரி. சாதாரணமாக மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தாலோ அல்லது நாங்கள் பிணத்தை அனுப்பி வைத்தாலோ நீதிமன்றத்திற்கு தகவல் கொடுக்கவேண்டுமென்றால் சரி. இவ்வழக்கில் மருததுவமனையில் இருந்து தகவல் எதுவும் வரப்பெற்றதா என்றால் ஞாபகமில்லை. இவ்வழககில் பிணத்தை பெற்றுக்கொண்ட மருத்துவரை நான் விசாரித்தேன். அவர் பெயர் டாக்டர் பரிமளாதேவி, அரசு மருததுவர், உசிலம்பட்டி மருததுவமனை. பரிமளாதேவி, பிணத்தை பிண கூராய்வு செய்த மருததுவர் என்றாலும், பிணத்தை பெற்ற மருத்துவரல்ல என்றால் சரியல்ல. இறந்துபோனவர் நேரடியாக மருத்தவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றாலும், அங்கு அவரை அனுமதித்த மருத்துவரையும், விபத்து பதிவேடு, இன்டிமேசன் போன்ற ஆவணங்களை மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் கூறியவாறு முதல் தாகவல் அறிக்கை பெற்ற பின்பு சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அதற்கு முன்பே சம்பவம் குறித்து தகவல் கிடைத்து சம்பவயிடத்திற்கு சென்றுவிட்டேன் என்றும், ஏற்கனவே கிடைத்த தகவலை மறைத்துவிட்டடேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சம்பவயிடத்திற்கு சென்று பிரேத விசாரணை செய்வதாக கூறுவதும் சம்பவயிடத்தில் சாட்சிகளை விசாரித்ததாக கூறுவதும் பொய் என்றாலும், பின்னிட்டு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது

என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் புகாரை எழுதிய நபரை விசாரித்தேன் என்றால் சரி. புகாரை எழுதியவர் திரு கணேசன் ஆவார். அவர் தான் அரசு சாட்சி 1 என்றால் சரி. நான் சொன்னதுபோல புகார் கொடுக்கப்படவில்லை என்றும் அது பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் விசாரிக்கும்போது எதிரிக்கும் அவரது மனைவிக்கும் இடையே பல வழக்குகள் இருந்தது பற்றி விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். முதுல் தகவல் அறிக்கையில் ஜீவனாம்ச வழக்கிற்காக சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஜீவனாம்ச வழக்கு எந்த நீதிமன்றத்தில் எந்தவழக்கு எண்ணில் நடைபெற்றுக்கொண்டிருந்தது என்று விசாரணை செய்தீர்களா என்றால் விசாரணை செய்தேன். சாட்சி கணேசனை விசாரித்து தெரிந்துகொண்டேன். சாட்சி கணேசனுக்கும் மேற்படி வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என தெரியவந்ததா என்றால் சாட்சிகணேசன் இறந்துபோன செல்வியின் அண்ணன். தனது தங்கையின் வழக்கு விவரங்களை கூறினார். அவர் கூறியபடி மேற்படி வழக்கு அந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்ததை நான் பார்க்கவில்லை. முதல் தகவல் அறிக்கை படித்துபார்த்தபோது உசிலம்பட்டி கோர்ட் வழக்கிற்கு ெசென்று திரும்பி வந்தபோது இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதாக உள்ளது என்றால் சரி. முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்றத்தில் எதிரியும் இறந்த நபரும் ஆஜரானதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி வழக்கு அனைத்து மகளிர் காவல்நிலைய உசிலம்பட்டியால் எதிரி மீது தொடரப்பட்ட வழக்கு என்றால் சரி. மேற்படி வழக்கு 498 எ, 406 படி வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்றத்தில் சமாதானமாக பேசி எதிரியும் இறந்து நபரும் சாட்சிகளும் சுளிஒச்சான்பட்டிக்கு திரும்பி வந்தததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்களை உசிலம்பட்டி நீதிமன்றத்தில் விசாரணைக்காக பார்க்கவில்லை. உசிலம்பட்டி நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கிக்ல இறந்த நபரோ, சாட்சிகளோ அன்று ஆஜராகவில்லை என்ற குறிப்பு உள்ளதை விசாரணையில் தெரிந்துகொள்ளவில்லை. உசிலம்பட்டிநீதிமன்றததில் உள்ள நீதிமன்ற நடுவரையோ, எம்.சி.யையோ விசாரிக்கவில்லை. உசிலம்பட்டி வழக்கில் புலன்விசாரணை செய்த அதிகாரியையோ, மேற்படி காவல்நிலையத்தில் ஆய்வாளரையோ, நீதிமன்றக்காவலரையோ வழக்கிற்காக விசாரணை செய்தீர்களா என்றால் விசாரிக்கவில்லை. மேற்படி வழக்கின் வழக்குக்கோப்பை பார்க்கவில்லை. மேற்படி வழக்கை புலன் விசாரணை செய்தது சமுத்திரவள்ளி மற்றும் அமிர்தம் என்ற ஆய்வாளர்கள் என்பது தெரியவந்ததா என்றால் அதை பற்றி நான் இந்த வழக்கில் நான் விசாரணை செய்யவில்லை. உசிலம்பட்டி வழக்கில் பேசப்பட்டு, மேற்படி வழக்கிலேயே சமாதானம் செய்து நஷ்டயீடு கொடுக்கப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது. அதற்கான ஆவணமும வழக்கு கோப்பில் இருந்தது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.3 மற்றும் இறந்த நபர், எதிரி, கையொப்பமிட்டிருந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் புலன்விசாரரயின்போது மேற்படி வழக்கிலுள்ள ஆவணங்கள் அனைத்தையும் பார்த்தேன் என்றாம் சமாதானாமாக சென்றுவிட்டபடியால் மேற்படி நபர் விசாரணைக்கு வரவில்லை என்றும் எல்லாம்

தெரிந்து இருந்தும் வழக்கிற்காக அதனை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.அதுபோல் ஜீவனாம்ச வழக்கை குறித்தும் விசாரணை நடத்தினேன் என்றாலும் அதனை இவ்வழக்கில் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி, கேரளாவில் எர்ணாகுளம் பக்கம் உள்ள தேவர் பிரிவில் முறுக்கு வியாபாரம் செய்துவந்தது விசாரணையில் தெரியவந்தது என்றால் தெரியவில்லை. எதிரி 2-வது திருமணம் செய்தது விசாரணையில் தெரியவந்தது. எதிரியானவர் இறந்தவருடன் சமாதானம் பேசி ஜாதி வழக்கப்படி வழக்கை முடித்துக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த விவரங்கள் சொன்னால் வழக்கிற்கு விரோதமாகி விடும் என்ற காரணத்தினால் அதனை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நீதிமன்றத்திற்கு சென்றபோது அவர்களுடைய வழக்கறிஞர்கள் யாரையாவது பார்த்தார்களா என விசாரணையில் தெரிந்துகொள்ளவில்லை. வழக்கறிஞர்களை இவ்வழக்கிற்காக விசாரித்தேன் என்றாலும் வழக்கிற்காக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர், எதிரி, மற்றும்இரண்டு சாட்சிகள் நீதிமன்றத்தில் இருந்து சம்பவயிடத்திற்கு எப்படி சென்றார்கள் என்று விசாரணையில் தெரிந்துகொண்டீர்களா என்றால பஸ்சில் சென்றார்கள். பேருநது பஸ் டிக்கெட்டை விசாரணையின்போது கைப்பற்றவில்லை. சம்பவயிடத்தை குறித்து மாதிரி வரைபடம் போட்டேன். ஏற்கனவே இறந்தவர் கொடுத்த வழக்கில், சம்பவயிடத்தை குறித்த வரைபடம் போட்டதை பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. சி.சி. வழக்கில் இறந்துபோனவர் மேற்படி இடத்தில் தான் குடியிருந்து வந்தார் என்ற விவரம் விசாரணையில் தெரியவந்தது. வரைபடத்தில் சம்பவ வீட்டிற்கு அருகிலோ, எதிரிலோ, எந்தவிதமான மரங்களும் இருந்ததாக குறிக்கப்படவில்லை என்றால் சரி. இறந்தவரின் தாயாரை வழக்கிற்காக விசாரணை செய்யவில்லை. இறந்த நபர் தாயாருடன் தான் வசித்து வந்தார் என்ற விவரம் தெரியவந்ததா என்றால் ஞாபகமில்லை. இறந்தவரின் தாயாரை இவ்வழக்கிற்காக விசாரணை செய்தோம் என்றாலும் அவரது வாக்குமூலம் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்ற காரணத்தினால் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்சொல்வதுபோல் சம்பவ இடம்அமைந்திருக்கவில்லை என்றாலும், ஏற்கனவே இருந்த வரைபடத்தை பார்த்தால் அது தெரியவரும் என்றால் சி.சி. வழக்கில் போட்ட வரைபடத்தை நான் பார்க்கவில்லை. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், நான் மாதிரி வரைபடத்தில் வரைந்ததுபோல் சம்பவயிடம் இல்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் அனைத்தும் வீட்டிற்குள் நடந்தது என்றால் சரி. சம்பவயிடத்தில் வீட்டின் தரை சிமிண்ட் தரை என பார்வைமகஜரில் குறிப்பிடவில்லை. என்ன மாதிரியான தரை என பார்வைமகஜரில் குறிப்பிடவில்லை. பார்வைமகஜரில் தரையில் இரத்தம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கூறியுள்ளேன். சம்பவ வீட்டில் சமையல் அறை உள்ளது. மேற்படி சமையல் அறையில் அடுப்பின் மேடை இருந்ததா, எதனால் செய்யப்பட்டிருந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரி.பார்வைமகஜரில் சம்பவயிடத்தில் இரத்தக்கறை இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரி. மேற்படி வீடு யார் பெயரில் உள்ளது என்பதற்க்ன ஆவணங்களையோ, அது சம்மந்தமாக கிராம அதிகாரியையோ, ரெவன்யூ அதிகாரிகளையோ விசாரித்தீர்களா என்றால் விசாரிக்கவில்லை. எதிரியை கைது செய்தததாக கூறப்படும் இடத்திற்கும் சம்பவயிட ஊருக்கும்

இடையே சுமார் 5 கி.மீ.தூரம் இருக்கும். சம்பவ ஊருக்கு தெற்கு திசையில் எதிரி கைது செய்யப்பட்டார். சம்பவ ஊர் உசிலம்பட்டி-வத்தரலக்குண்டு செல்லும் பிரதான சாலையில் உள்ளது. அதில் பஸ் நிறுத்தம் உள்ளது. அந்த பஸ் நிறுத்தத்தில் இருந்து சம்பவயிடம் எவ்வளவு தூரம் என்றால் 5 கி.மீ. வடதிசையில் உள்ளது. பால்ராஜ்-ஐ நான் வழக்கிற்காக அழைத்தேன். அவர் சுளிஒச்சான்பட்டியில் இருந்தது. மேற்படி நபர் வசிப்பது நாட்டான்மங்கலம் என்றால் இரண்டு ஊர்களும் ஒரே ஊர்தான். வீட்டில் இருந்தவரை தான் வழக்கிற்காக அழைத்தேன்.என்றால் அவர் அந்த ஊர் காரர். எனவே அவரை நான் அழைத்தேன். அவர் சுளிஒச்சான் ஊர் இல்லை என்றாலும் நாட்டான்மங்களத்திற்கும் சுளிஒச்சான்பட்டிற்குமிடையே நிறை தூரம் இருக்கும் என்றும் வழக்கிற்காக அதனை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பிரேதத்தை உறவினரிடம் காவலர் பி.சி.719 குபேந்திரன் என்பவர் ஒப்படைத்தார். அவர் அரசு மருத்துவமனையில் வைத்து ஒப்படைத்தார். அதன்பிறகு தான் ஈமச்சடங்குகள் செய்யப்பட்டது என்றால் சரி. பொதுவாக விசாரணையின்போது இரத்த மாதிரி உடல் கூராய்வின்போது பெற்றுக்கொள்வதுண்டு என்றால் சரி. இவ்வழக்கில் இறந்தவரின் இரத்த மாதிரி உடற்கூராய்வின்போது பெறப்பட்டதா என்றால் பெறப்பட்டது. அது பரிசோதனைக்காக அனுப்பப்படடது என்றால் சரி. சட்டத்திற்கு புறம்பாக சாட்சியங்களை தயார் செய்வதற்காக பெறப்பட்டது என்றாலும் மேற்படி இரத்தத்தை ஆய்வுக்காக அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. நான்சொல்வதுபோல், எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் அவரிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த ஒரு சான்றுப்பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. கத்தியை கைப்பற்றியதாக கூறப்படும கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.14-ல் கத்தியில் இரத்தக்கறை படிந்திருந்ததாக குறிப்பிடவில்லைஎன்றால் சரி. ஒப்புதல் வாக்குமுலத்தில் இரத்ததை எதிரி துடைத்து வைத்ததாக கூறப்பட்டிருப்பதாக சாட்சி சொல்கிறார்.எதிரி தன் உடையில் துடைத்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். தற்போது நான் நீதிமன்றத்தில் இதனை வழக்கிற்காக கூறுகிறேன் என்றாலும் அது சரியானதல்ல என்றால் சரியல்ல.

அ.சா.1 தனது வாக்குமூலத்தில் உசிலம்பட்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார் என்று கூறியுள்ளார் என்றால் சரி. தானும் மகராஜனும் சம்பவத்தின்போதுவீட்டினுள் செல்ல முயன்றபோது எதிரி இதோடு என்னை பிடித்த சனியன் தொலைந்துபோனது என்று கூறவில்லை என்றால் சரி. அதேபோல் தொலைந்து போடி என்று சொன்னதாக அ.சா.1 என் விசாரணையில் கூறவில்லை என்றால இத்தோடு செத்து தொலைந்துபோடி என்று சத்தம் கேட்டதாக கூறியுள்ளார். மகாராஜன் அன்று நீதிமன்றத்திற்கு யதேச்சையாக வந்ததாக கூறவில்லை என்றால் தான் கணேசனோடு வந்திருந்தாக கூறியுள்ளார். யதேச்சையாக மகாராஜன் வந்ததாக கூறவில்லை. 30.6.2011 ம் தேதி 11.15 மணிக்கு எதிரியின் ஊரை பகல் 12.00 மணிக்கு அடைந்ததாக அ.சா.1 என் விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. அ.சா.1 சம்பவயிடத்திற்கு செல்லுமபோது தங்கையின் உடல் கீழே துடித்துக்கொண்டிருந்ததாக என் விசாரணையில் கூறவில்லை என்றால் கூறவில்லை.

இரத்தவெள்ளத்தில் கழுத்து அறுபட்ட நிலையில் பிணமாக இருந்தார் என கூறியுள்ளார். எங்களை பார்த்தவுடன் ஆஜர் எதிரி எங்களை தள்ளிவிட்டு ஓடிவிட்டதாக அ.சா.1 என் விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. ஓட்டமும் நடையுமாக உத்தப்பநாயக்கனூர் காவல்நிலலயத்திற்கு சென்றதாக அ.சா.1 என் விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. அதுபோல் வழிபோக்காக வந்த ஆட்டோவில் எதிரி ஏறிசென்றதாக அ.சா.1 என் விசாரணையில் கூறவில்லை.

அ.சா.2 மகாராஜன் என் விசாரணையில் இடதுதோள்பட்டையில் இரண்டு குத்துக்காயங்களும் இருந்ததாக கூறவில்லை என்றால் சரி. நானும்,மேற்படி எதிரியிடம் என்னடா இப்படி செய்துவிட்டாய் என சொன்னதாகவும், எதிரி அவர்களை தள்ளிவிட்டு ஓடியதாகவும் கூறியுள்ளாரா என்றால் அவ்வாறு கூறவில்லை.

அ.சா.3 ஜெயம் என் விசாரணையில் செல்போன் மூலமாக தகவல் கிடைத்ததாக கூறிவில்லை என்றால் சரி. தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டதாகவும் 10,20 ஆட்களை லாரியில் ஏற்றிக்கொண்டு ஆஜர் எதிரியின் ஊருக்கு 3 மணிக்கு சென்றதாக என் விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. 108 ஆமபுலன்ஸ் மூலமாக பிரேதத்தை எடுததுச்சென்றதாக அ.சா.3 என் விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. சாட்சிகளை நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரிக்கவில்லைஎன்றால் சரியல்ல.பின்னிட்டு வழக்கிற்காக நான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல.
ம.வி..இல்லை.

ஒப்பம்.தினகரன், ஆய்வாளர்.

ஒப்பம். எஎஎ, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION..

| | | |
|---|---|---|
| Name | : | |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 2.3.2019.

மு.வி.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.

DEPOSITION OF WITNESS        FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 1.3.2019

மு.வி.